# கடற்கரை கவியரங்கு634

நாள்0 4-02-2024.

## மனமே அழகு!

கண்ணில் முகிழும் கனவுகள் எல்லாம்,
மண்ணில் ஒருநாள் பலித்திடக் காண்போம்!
எண்ணம் தன்னில் நிறைவாய் இருந்தால்,
வண்ணமாய் வாழ்க்கை நகருமே யன்றோ?

அழகோ! மனமோ அருந்தவ நிலையோ!
முகிழும் சிந்தையின் முகவரி ஆகும்!
பழகிய மனத்தின் சிந்தை யாவும்,
எழுதிய கதைகளின் வடிவில் மயங்கும்!

அழகாய் மனத்தை ஆக்கிடல் வேண்டும்!
தொழுத கையுள் படையும் ஒடுங்க,
வழுவும் சிந்தையை நெறியிடல் வேண்டும்!
தழுவும் வாழ்வும் அறங்களால் நிறையும்!

பழுதாய் மனத்துள் தைத்து நிரம்பிய,
பக்குவ மில்லாச் சிந்தையைத் தவிர்ப்போம்!
சொக்கிய கதைகளில் சுகம்தேடி நில்லாமல்,
தேக்கும் அறிவினில் திறப்பைச் செய்வோம்!

ஆக்கம் என்பது அறிவின் செயலே!
தாக்கம் என்பது மனத்தின் பிறழ்வே!
ஊக்கம் என்பது உள்ளத்தில் பிறந்தால்,
நீக்கம் இன்றிப் பெருமைகள் அடைவோம்!

வாக்கும் மனமும் ஒன்றாய் நிறைந்து,
போக்கும் நீக்கும் பொலிவின்றிப் போக,
ஆக்கமாய் அறிவே மிளிரக் காண்போம்!
தேக்கம் இன்றி தெளிவுடன் வாழ்வோம்!

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

**04-02-2024 (மதியம் 01-20)**